சுவாமியே! சரணம் ஐயப்பா!

# ஐயப்பன் மாலை



வட்டக்கச்சி சில்வா வீதி

## ஸ்ரீ ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே! சரணம் ஐயப்பா!

# ஐயப்பன் மாலை

## வட்டக்கச்சி சில்வா வீதி
## ஸ்ரீ ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| விநாயகர் வணக்கம் | - 01 |
| பிள்ளையார் பெருமை | - 02 |
| வட்டக்கச்சி சில்வா வீதி ஐயப்பசுவாமி தோன்றிய வரலாறு | - 03 |
| சபரிமலை ஐயப்பன் வரலாறு | - 06 |
| மாலை அணியும் போது சொல்ல வேண்டிய மந்திரம் | - 10 |
| ஐயப்பன் கவசம் | - 11 |
| ஐயப்பன் பாடல்கள் | - 19 |
| வழிநடை சரணக்கூப்பிடு | - 20 |
| அருள்மிகு ஐயப்பன் நூற்றெட்டு சரணக்கோவை | - 22 |
| விளக்கில் ஐயன் எழுந்தருள வேண்டும் | - 28 |
| ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா | - 30 |
| படிப்பாடல் | - 32 |
| இருமுடிப் பிரியன் | - 36 |
| பம்பையில் பிறந்த பாலன் | - 37 |
| சரணம் சாமியே ஐயப்பா | - 38 |
| ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம் (நடைசாத்தும் பாடல்) | - 40 |
| பச்சைமயில் வாகனமே | - 42 |
| வாவர் முகம்மது ஊரல்லோ | - 43 |
| கன்னிச்சாமி | - 44 |
| முத்திரை தேங்காய் பாடல் | - 45 |
| தையினில் ஜொலிப்பாய் தாய்போல் காப்பாய் | - 46 |
| பிழை பொறுத்தல் | - 49 |
| மாலையை அவிழ்த்து விரதத்தினை முடித்துக்கொள்ளும் பூஜை | - 50 |
| ஸ்ரீ ஐயப்பன் குறித்து | - 51 |
| பம்பை நாதனை அடையப் பதினொரு வழிகள் | - 53 |
| சபரி மலை யாத்திரைக்கு | - 55 |
| சபரி மலை செல்வோர் மேற்கொள்ள வேண்டிய விரத முறைகள் | - 57 |
| மங்களம் | - 63 |
| தினமும் விளக்கேற்றல் | - 64 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வணக்கம்

கலை நிறை கணபதி சரணம் சரணம்

கஜமுக குணபதி சரணம் சரணம்

தலைவரி நின் இணையடி சரணம் சரணம்

சரவண பவகுக சரணம் சரணம்

சிலைமலை யுடையவ சரணம் சரணம்

சிவசிவ சிவசிவ சரணம் சரணம்

உலைவரு மெபாரபரை சரணம் சரணம்

உமைசிவை யம்பிகை சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பெருமை

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆறுமுக வேலனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையுமே தீர்த்துவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

மஞ்சளிலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் காட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல் பொரி கடலையும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடி தூங்குவார்
(பிள்ளையார்)

கலியுகத்தின் விந்தையைக் காணவேண்டி அனுதினம்
மூஷிகத்தின் ஏறியே இஷ்டம் போலச் சுற்றுவார்
(பிள்ளையார்)

ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச இரட்சமாம்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வட்டக்கச்சி சில்வா வீதி

## ஐயப்ப சுவாமி தோன்றிய வரலாறு

மேற்படி வட்டக்கச்சி குடியேற்றத்திட்டம் 05.10.1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனவும் குறிப்பிட்ட திட்டத்தில் 268ம் இலக்க காணி திரு வேலுப்பிள்ளை முருகேசு என்பவருக்கு வழங்கப்பட்டு மனைவி பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வரும் காலத்தில் இவரினது வீட்டுக் காணிக்கு கிழக்குப் பக்கமாக மிகவும் அடர்ந்த காடாக இருந்து வந்தது எல்லோரும் நன்கு அறிவர்.

1954ம் ஆண்டு ஆனி மாதம் உத்தர நட்சத்திரம் கூடிய நாளில் திரு. வே. முருகேசு அவர்ளினது மனைவி இரத்தினம் என்பவர் மூன்றாவது பிள்ளை மு. வேலாயுதபிள்ளை (1 1/2 வயது குழந்தைக்கு பால் ஊட்டிக் கொண்டு படுத்திருந்ததாகவும் தாயும் பிள்ளையும் நல்ல உறக்கத்தில் இருந்த வேளை திடிரென தாய் விழிந்தெழுந்து பார்த்த நேரத்தில் குழந்தை இல்லாமை கண்டு கதறி அழுத வண்ணமாக வெளியில் படுத்திருந்த கணவருக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் தெரிவித்து சகலருமாக இரவு கதறி அழுத வண்ணமாக இருக்கின்ற வேளையில் அயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் உள்ளவர்கள் அவலச் சத்தம் அறிந்து சகலரும் ஒன்று கூடி இரவிரவாக பல இடங்களிலும் தேடியும் குழந்தையை காணாமையால் மிகவும் வேதனையுடன் இருந்து அழுத வண்ணமாக இருந்தனர் மறு நாள் பொழுது விடிந்தவுடன் இன்னும் பல ஆட்கள் சேர்ந்து தேடிய வண்ணமாக இருந்தனர். என்னும் பல குழுக்களாக பிரிந்து காடுகளை கொப்புநெரி வெட்டி உட்புகுந்து தேடிய வண்ணமாக இருந்த வேளையில் சுவாமியார் முருகேசுவுடன் வந்த குழுவினர் காட்டுக்குள் இருந்த ஒற்றை அடிப் பாதையால் வந்து கொண்டு வரும் போது தீடிரென நடுக்காட்டில் அப்பா என்ற சத்தம் அவருடைய காதில் கேட்டதாக வந்தவர்களுக்கு சொன்னதும் அடுத்த குரல் அப்பா என்று அவரினுடைய காதில் கேட்டதும் இவர்களை அவ்விடத்தில் விட்டுவிட்டு சுவாமியார் பெரும் ஆவேசமாக காட்டுக்குள் உள் நுழைந்து பார்த்த போது பிள்ளை ஒரு பெரிய காட்டாமணக்கு மரத்தின் பக்கத்தில் இருந்து ஏறக்குறைய 10 அடி உயரமுள்ள புற்றின் நடுவில் கை கட்டிய வண்ணமும் சம்மாணி கொட்டிய நிலையிலும் இருந்ததைக் கண்ட சுவாமியார் மரங்களில் ஏறி புற்றிலிருந்து குழந்தையை தூக்கி கீழே வரும் போது குழந்தை சிரித்த வண்ணமாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததாகவும் பிள்ளையினது தேகத்தில் இருந்த முசுறு சூகை எறும்புகளை துடைத்து ஆனந்தக் கடத்துடன் துன்பப்படும் தாயாரிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார் அவ்வேளையில் சுவாமியார் மனம் நொந்து துன்பப்படும் போது நான் ஐயப்பன் யானே உனது பிள்ளையை தூக்கிக்கொண்டு சென்றேன். யான் பிள்ளையை கொண்டுபோய் இருத்திய இடம் முன்பு ஒரு காலத்தில் இருந்த இடம் எனவே இவ்விடத்தில் கோவில் அமைத்து வழிபாடுசெய்து வரும்படி கூறியதால் குறிப்பிட்ட கர்ட்டை வெட்டி துப்பரவு செய்து ஐயப்பனுக்குரிய சூலம் வைத்து அனைத்து மக்களினது ஒத்துழைப்புடன் சகல பூசைகளையும் காய் மடை பூமடை என்று பல பூசைகளை செய்து வந்துள்ளார்.

அன்றிலிருந்து முருகேசு சுவாமியாராகி தாடி திரிசடை கோலத்துடன் இருந்தமையால் சுவாமியார் என்னும் பெயர் வந்தது என அறிக. சுவாமியாரால் ஸ்தாபிக்கப்பட்டு சிறு கட்டடத்துடன் வழிபடப்பட்டு வந்த ஐயப்பன் கோவில் அன்னார் 2004ம் ஆண்டு சமாதியாகியமையைத் தொடர்ந்து நிர்வாகக் குழுவின் அயரா முயற்சியால் பாரிய கட்டிடமாக உருவாக்கப்பட்டு ஆவர்த்தன மகா கும்பாபிஷேகம் 27.06.2007ம் நாள் நடை பெற திருவருள் கைகூடியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சபரிமலை ஐயப்பன் வரலாறு

திருப்பாற்கடலைக் கடைந்த போது அசுரர்களை மயக்குவதற்காக திருமால் மோகினி வடிவம் எடுத்தார். அந்த வடிவைக்கண்டு பரவசம் அடைந்த சிவ பெருமான் அவளைத் தழுவி நின்றார். அவ்வேளையில் சிவவிஷ்ணுவின் ஆற்றல்கள் அனைத்தும் கொண்ட தர்மசாஸ்தா அவதரித்தார். அவரது பிறப்பிற்குக் காரணம் இருந்தது. கரம்பன் என்ற அசுரனின் மகளான மகிஷி எருமைத் தலையுடன் பிறந்தாள். இவளது சகோதரன் மகிஷாசுரனை சண்டிகா தேவி கொன்றாள் என்பதற்காக, அச்செயலுக்குப் பரிகாரம் காண்பதற்கு விந்தியமலைக்குச் சென்று தவமிருந்தாள். தன்னை யாராலும் அழிக்க முடியாத வரத்தைக் கேட்டாள். பிரம்மா மறுக்கவே, ஒரு ஆணுக்கும் மற்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணுக்கும் பிறக்கும் குழந்தையால் தான் தனக்கு அழிவு வர வேண்டும் என வேண்டிக்கொண்டாள். அந்த மகிஷியை அழிக்கவே, தர்மசாஸ்தாவின் அவதாரம் அமைந்திருந்தது.

பின்பு, பூவுலகிற்கு மகிஷி வந்தாள். அவளை அழிக்கும் எண்ணம் கொண்ட சிவன், சுந்தரன் என்ற ஆண் மகிஷனை உருவாக்கினார். மகிஷி அவன் மீது காதல் கொண்டாள், அவர்கள் இணைந்து வாழ்ந்து வந்தனர். தர்மசாஸ்தா ஆரம்பத்தில் சிவனுடன் கயிலாயத்திலேயே வாழ்ந்தார். பின்னர் மகிஷியை அழிப்பதற்காக 12 ஆண்டுகள் மானிடனாக வாழ்வதற்குப் பூவுலகிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவ்வாறு பூவுலகில், மார்கழி மாதம், சனிக்கிழமை உத்திர நட்சத்திரத்தில் அவர் பிறந்தார்.

காட்டில் விழுந்து கிடந்த அந்தக் குழந்தையை பந்தள மன்னர் ராஜசேகரன் கண்டார். குழந்தை இல்லாத அவர் அக்குழந்தையை அரண்மனைக்குக் கொண்டு சென்றார். செல்லும் வழியில் முதியவர் வடிவில் தோன்றிய திருமால் குழந்தையின் கழுத்தில் கனகமணி மாலை ஒன்றைச் சூட்டி ''மணிகண்டன்'' என்று குழந்தைக்குப் பெயர் சூட்டினார்.

குழந்தையுடன் அரண்மனைக்குச் சென்றதும், மகாராணியும் மகிழ்ச்சி அடைந்தாள். சுபவேளையில் அவளுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜராஜன் எனப் பெயர் சூட்டினர். தனக்கென்று குழந்தை பிறந்தாலும் பந்தள ராஜா தன் முதல் மகனான மணிகண்டனுக்கே பட்டம் சூட்ட விரும்பினார். இதை வஞ்சனை நிறைந்த அமைச்சர் ஒருவர் விரும்பவில்லை. மகாராணியின் மனதை மாற்றி, ராஜராஜனுக்கு முடி சூட்டும்படி கூறினார்.

மகாராணியும் ஐயப்பனைக் கொல்வதற்காக தலைவலி வந்தது போல நடித்தார். மருத்துவர்கள் மூலமாக புலிப்பால் கொண்டு வந்தால் தான் தலைவலி சரியாகும் எனக் கூறச் செய்தாள். மணிகண்டனும் காட்டிற்குச் சென்றான், காட்டிலிருந்த பூதகணங்கள் அவரை வரவேற்றன. முனிவர்கள் அவரைப் பொன்னம்பலத்திற்கு அழைத்துச் சென்று, ரத்தின சிம்மாசனம் அமைத்து, பூஜித்து வழிபட்டனர். இந்த இடமே தற்போது மணிகண்டன் ஜோதியாக காட்சிதரும் பொன்னம்பலமேடு ஆகும்.

அங்கிருந்தபடியே அவர் மகிஷியுடன் போரிட்டார். அவள் நதிக்கரையோரம் போய் விழுந்தாள். தன்னை மிதித்துத் தள்ளியது ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்த ஒருவனே என்பதை உணர்ந்த மகிஷி உயிர் பிரியும் நேரத்தில் அவரை வணங்கி நின்றாள். ஐயப்பன் அவளது உடலை தன் கரத்தால் தடவவும், அவள் அழகிய உருப்பெற்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண் மென வேண்டினாள். இப்பிறப்பில் பிரம்மச்சாரியாக வாழ முடிவு செய்திருப்பதைக் கூறிய ஐயப்பன் தனது இடப்பாகத்தில் சிறிது தூரத்தில் நிலை கொள்ளும்படி அருள்புரிந்தார். அவளே மஞ்சமாதா என அழைக்கப்படுகிறாள்.

பின்பு புலிகளுடன் ஐயப்பன் நாடு வந்தார். அவரது திறமையை அறிந்த மக்களும் தலை தாழ்த்தி வணங்கினர். எதிரிகளும் மன்னிப்பு கேட்டனர்.

பின்பு தனது 12 வயது முடிந்து விட்டதை மன்னனிடம் உணர்த்திய மணிகண்டன், தான் ஒரு தெய்வப் பிறவி என்பதை ஒப்புக்கொண்டார். அங்கிருந்து ஒரு அம்பை எய்வதாகவும், அது எந்த இடத்தில் விழுகிறதோ அங்கு தனக்கு கோயில் கட்டும்படியும் பந்தள மன்னருக்கு அருள்பாலித்தார். அதன்படியே பந்தளராஜா கோயில் கட்ட ஏற்பாடு செய்தார். பரசுராமரின் உதவியுடன் மகர சங்கர நாளில் சனிக்கிழமையன்று கோயில் உருவாக்கப்பட்டது. **மாளிகைப் புறத்தம்மை, கருப்ப சுவாமி, கடுத்த சுவாமி** ஆகியோருக்கும் சிலைகள் அமைக்கப்பட்டன.

இதனால் தான் சனிக்கிழமைகளில் ஐயப்பன் கோயிலுக்குச் சென்றுவருவது இரட்டிப்பு பலன் தருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை அணியும் போது சொல்ல வேண்டிய மந்திரம்



ஞான முத்ராம் ஸாஸ்தரு முத்ராம்
குரு முத்ராம் நமாம் யஹம்
வன முத்ராம் சுத்த முத்ராம்
ருத்ர முத்ராம் நமாம் யஹம்
சாந்த முத்ராம் ஸத்ய முத்ராம்
வ்ருத முத்ராம் நமாம் யஹம்
சாபர்யாச்ரம ஸ்த்யேன மத்ராம் பாது ஸாதாபிமே
குரு தஷிணயா பூர்வம் தஸ்யானுக்ரஹ காரிணே
சரணகாத முத்ராக்யம் தம் முத்ராம் தாரயாம் யஹம்
சின முத்ராம் கேசரி முத்ராம் பத்ரமுத்ராம் நமாம் யஹம்
சாபாயாசல முத்ராயே நமஸ்துபயம் நமோ நம:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் கவசம்

(பிரம்மாண்ட புராணத்தில், கேரளீய மஹாத்மியத்தில் தவிவசிரேஷ்டிரரான பரசுராமரால் துதிக்கப்பட்ட இக்கவசத்தை தினமும் பாராயணம் செய்வோர்க்கு எத்துணை துன்பம் வரினும் விலகும். ஐயப்பனின் அருள் கிட்டும்.)

## கணபதி துதி



அரியின் மருகோனே
ஆறுமுகன் சோதரனே
இனிமைத் தமிழோனே
ஈசனின் பாலகனே
உமையவளின் செந்தேனே
ஊழ்வினை யழிப்பவனே
எவ்வுயிரும் காப்பவனே
ஏழையை ஆட்கொண்டு
ஐங்கரனே அருள்புரிவாய்

## காப்பு

அரிஹர புத்ரனே, ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை, ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை, சாந்த ஸ்வரூபனை
தினம்தினம் போற்றிப் பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்


மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக (1)

புலிவாகனனே வருக வருக
புலியெல்லாம் காத்திட வருக வருக
பூரண நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக (2)

பூதநாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம் பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக (3)

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணி கண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக (4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட் கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக (5)

பதினெண் படியை மனத்தில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிகிரீசனை நினைத்தே நீராடிட
துன்பங்கள் எல்லாம் தூள்தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே (7)

பம்மையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அநுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் (8)

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (9)

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க (10)

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரன் தோழன் வாயினைக் காக்க
பம்மையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜியின் நாவினைக் காக்க (11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக வரதன் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளைக் காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க (12)

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க (13)

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்மாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்மசாஸ்தா துடைதனைக் காக்க (14)

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க (15)

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளுரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க (16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எருமேலி சாஸ்தா என்றுமே காக்க (17)

அரியின் மகனார் அநுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடிஈசன் இடப்புறம் காக்க (18)

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் என்னை என்றுமே காக்க (19)

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்த மலைதனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய் (20)

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்மையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் (21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம், பித்தம், சிலேட்டுமத்துடனே
வாந்தியும், பேதியும், வலிப்பும், சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா (22)


கல்வியும், செல்வமும், கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனைநான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா (23)

காமம், குரோதம், லோபம், மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகிவிடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் (24)

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் (25)

மூப்பும், பிணியும், வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன்புடனே உன்திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே (26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நமஸ்காரம்**

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கர் சோதரா ஐயப்பா நமோ நமோ (27)

பொன்னம் பலத்துறை ஈசா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மகிஷிமர்த்தனா மணிகண்டா நமோ நமோ (28)

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்கள்

சரணமப்பா சரணமய்யா ஸ்வாமியே
சரணமப்பா சரணமய்யா ஸ்வாமியே (சரணமப்பா)

நெற்றியிலே நீரணிந்து நீலஆடைதாங்கியே
சுற்றிவந்து ஐயன்பாதம் தேடினோம் - ஐயப்பா
சபரிமலை நோக்கியே ஓடினோம் (சரணமப்பா)

பாவக்கடலை கடந்துசென்று பரமனடி சேர்ந்திட
தவக்கோல துளசிமாலை தாங்கினோம் - ஐயப்பா
தாரணியில் உன்புகழை பாடினோம் (சரணமப்பா)

சரமெடுத்து தீர்த்தமாடி வேட்டையாடி கூட்டம்கூடி
பேட்டையிலே துள்ளிவந்தோம் ஸ்வாமியே - ஐயப்பா
பேரானந்தம் பேரானந்தம் ஸ்வாமியே (சரணமப்பா)


இருமுடியும் தாங்கிக்கொண்டு பெருவழியில் நடக்கையிலே
கரிமலையில் கதறுகிறேன் ஐயனே - ஐயப்பா
காத்தருள வேண்டுகிறோம் மெய்யனே (சரணமப்பா)

பாவனமாம் பம்பாதனில் பாலகனே உன்னைகண்டு
பாட்டுபாட பாவவினை போகுதே - ஐயப்பா
பக்தியோடு கைஉனையே கூப்புதே (சரணமப்பா)

ஆறுவாரம் நோன்பிருந்து ஆறுமூன்று படிகளேரி
ஆரவார கூட்டத்திற்கு நடுவிலே
ஆனந்தமாய் தரிசனமும் காண்போமே (சரணமப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிநடை சரணக்கூப்பிடு



சாமியே ஐயப்பா

ஐயப்பா சாமியே

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு

சபரிமலைக்கு பள்ளிக்கட்டு

கற்பூரஜோதி சுவாமிக்கே

காணிப்பொருள் சுவாமிக்கே

பகவானே பகவதியே

பகவதியே பகவானே

தேவனே தேவியே

தேவியே தேவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈஸ்வரனே ஈஸ்வரியே
  ஈஸ்வரியே ஈஸ்வரனே
ஐயப்பபாதம் சாமிபாதம்
  சாமிபாதம் ஐயப்பபாதம்
பாத பலம் தா தேக பலம் தா
  தேக பலம் தா பாத பலம் தா
வில்லாளி வீரனே வீர மணிகண்டனே
  வீரமணி கண்டனே வில்லாளி வீரனே
பகவான் சரணம் பகவதி சரணம்
  பகவதி சரணம் பகவான் சரணம்
தேவன் சரணம் தேவி சரணம்
  தேவி சரணம் தேவன் சரணம்
தாங்கி விடப்பா ஏந்தி விடப்பா
  ஏந்தி விடப்பா தாங்கி விடப்பா
தூக்கி விடப்பா ஏற்றி விடப்பா
  ஏற்றி விடப்பா தூக்கி விடப்பா
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
  காலுக்கு மெத்தை கல்லும் முள்ளும்
நெய் அபிஷேகம் சுவாமிக்கே
  சுவாமிக்கே நெய் அபிஷேகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக்கோவை

| | |
|---|---|
| ஸ்வாமியே | சரணம் ஐயப்பா! |
| கன்னி மூல கணபதி பகவானே | ” |
| ஹரிஹரஸுதனே | ” |
| வில்லாளி வீரனே | ” |
| வீரமணி கண்டனே | ” |
| வேடடைக்கோர் மகனே | ” |
| அச்சன் கோவில் அரசே | ” |
| அனாத ரக்ஷகனே | ” |
| ஆபத்பாந்தவனே | ” |
| எருமேலி சாஸ்தாவே | ” |
| சரணகோஷப் பிரியனே | ” |
| வேதகோஷப் பிரியனே | ” |
| இருமுடிப் பிரியனே | ” |
| பாயஸன்னப் பிரியனே | ” |
| பாலபிஷேகப் பிரியனே | ” |
| நெய் அபிஷேகப் பிரியனே | ” |
| ஸ்வாமியுடைய பாதார விந்தங்களே | ” |
| ஸ்வாமியுடைய பாதாதிகேசமே | ” |
| ஸ்வாமியுடைய கேசாதி பாதமே | ” |
| ஸ்வாமியுடைய பூத கணங்களே | ” |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோஹினி சுதனே சரணம் ஐயப்பா!
மோகன ரூபனே ”
மோஹினி பாலனே ”
சபரி கிரீசனே ”
மணிகண்டனே ”
ஷண்முகன் சோதரனே ”
கஜானனன் ஸோதரனே ”
ஆறுமுகம் ஸோதரனே ”
வெற்றிவேல் முருகன் தம்பியே ”
ஆச்ருத வத்ஸலனே ”
சேவிப்போர்க் கானந்த மூர்த்தியே ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தஜனப் பிரியனே சரணம் ஐயப்பா!
பாப விமோசனனே ”
நின் திருவடியே ”
கைலாச வாசனே ”
இந்திராதிப் பிரியனே ”
மஹிஷி மர்த்தனனே ”
துஷ்ட ஸம்ஹாரனே ”
ஈச்வர ஸுதனே ”
ஆனந்த விக்ரஹனே ”
அற்புத விக்ரஹனே ”
உலகேச்வரனே ”
ஓங்கார ரூபனே ”
கருணா ஸாகரனே ”
தீன தயாளனே ”
நாரதமுனி சேவிதனே ”
அம்பிகா சுதனே ”
அம்புஜலோசனனே ”
கருணாகரனே ”
காருண்ய மூர்த்தியே ”
ஏழை பங்காளனே ”
எங்கள் சங்கடங்கள் தீர்க்கணும் பகவானே ”
தீன தயாபரனே ”
பத்மநாபப் பிரியனே ”




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இந்திராதி ரஞ்சிதனே | சரணம் ஐயப்பா! |
| இந்திராதி பூஜிதனே | ” |
| இஷ்டஜன பாலகனே | ” |
| உமையாள் லாளிதனே | ” |
| உண்ணிமணி கண்டனே | ” |
| நித்யநிரா மயனே | ” |
| ஸத்ய ஸ்வருபனே | ” |
| ஆதிவியாதி ஹரனே | ” |
| ஸஹஸ்ர நாமப் பிரியனே | ” |
| சரண கானாவலிப் பிரியனே | ” |
| மதுசூதன ஸுதனே | ” |
| கலிகால வரதனே | ” |
| பம்பா வாசனே | ” |
| பம்பையில் சிசுவே | ” |
| பம்பையில் ஸ்னானமே | ” |
| ஆனந்த தரிசனம் தரணும் பகவானே | ” |
| நீலிமலை ஏற்றணும் பகவானே | ” |
| குருவாயூர் அப்பனே | ” |
| த்ருப்பையார் அப்பனே | ” |
| வைக்கத் தப்பனே | ” |
| ஏத்துமானூர் அப்பனே | ” |
| கடப்பாட்டூர் அப்பனே | ” |
| வடக்குநாதன் ஸ்வாமியே | ” |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சோத்தாணிக்கரை அப்பனே | சரணம் ஐயப்பா! |
| சோத்தாணிக்கரை பகவதியே | ” |
| கொடுங்கல்லூர் பகவதியே | ” |
| வாவரின் தோழரே | ” |
| சரங்குத்தி ஆலே | ” |
| மாளிகாபுரத்து அம்மதேவி | |
| லோக மஞ்சமாதாவே | ” |
| ஸ்வாமிட பஸ்மக்குளமே | ” |
| ஸ்வாமிட கற்பூர ஆழியே | ” |
| ஸ்வாமிட பொன்னுபதினெட்டாம் படிகளே | ” |
| ஸ்வாமிட பூதகணங்களே | ” |
| பூர்ண புஷ்கலா காந்தரே | ” |
| பந்தளராஜ குமாரனே | ” |
| பந்தளத்தின் ஜோதியே | ” |
| எங்கும் நிறைந்தவனே | ” |
| ஆனந்த தரிசனம் தரணும் பகவானே | ” |
| காந்தமலை ஜோதியே | ” |
| அன்னதானப் பிரபுவே | ” |
| ஆர்யங்காவில் அய்யனே | ” |
| அச்சன் கோவில் அரசே | ” |
| யானை முகன் சோதரனே | ” |
| அப்பாச்சி மேடே | ” |
| இப்பாச்சி மேடே | ” |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| சபரி பீடமே | சரணம் ஐயப்பா! |
| கடுத்த ஸ்வாமியே | ,, |
| கருத்த ஸ்வாமியே | ,, |
| கொச்சு கடுத்த ஸ்வாமியே | ,, |
| ஸ்ரீ பூத நாதனே | ,, |
| கல்லிடங்குன்றே | ,, |
| அழுதா மேடே | ,, |
| சிவசக்தி பாலனே | ,, |
| தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபனே | ,, |

**சுவாமியே சரணம் ஐயப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவிளக்கில் ஐயன் எழுந்தருள வேண்டும் என பிரார்த்தனை செய்து கொண்டு கீழ்க்கண்ட நாமாங்களால் அர்ச்சிக்கவும்**

1. அச்சங்கோவில் அரசே போற்றி
2. ஆரியங்காவு அய்யாவே போற்றி
3. அகில நாயகனே போற்றி
4. ஆறுமுகன் சோதரனே போற்றி
5. அன்பர்க்கு மெய்யன்பனே போற்றி
6. ஆனைமுகன் தம்பியே போற்றி
7. இருமுடிப் பிரியனே போற்றி
8. ஈசன் மகனே போற்றி
9. இடரை தீர்ப்பவனே போற்றி
10. ஈடில்லா தெய்வமே போற்றி
11. இளநீர் பிரியனே போற்றி
12. வன்புலி வாகனனே போற்றி
13. உண்மையின் தத்துவமே போற்றி
14. உலகைக் காப்பவனே போற்றி
15. உலக நாயகனே போற்றி
16. ஊழ்வினை களைபவனே போற்றி
17. ஐயந் தவிர்ப்பவனே போற்றி
18. ஐயப்ப தெய்வமே போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஓங்கார ரூபனே போற்றி
20. ஒற்றுமையில் ஒளிர்பவனே போற்றி
21. கற்பூரப் பிரியனே போற்றி
22. காந்தமலை வாசனே போற்றி
23. கற்பூர ஜோதியே போற்றி
24. சபரி பீடமே போற்றி
25. தர்ம சாஸ்தாவே போற்றி
26. கால சாஸ்தாவே போற்றி
27. தீப ஜோதியே போற்றி போற்றி

என்று அர்ச்சித்த பின்னர் சாம்பிராணி, ஊதுபத்தி, காண்பித்து, பானகம், நீர்மோர், கடலை சுண்டல், வெற்றிலை பாக்கு, பழம் வைத்து நிவேதனம் செய்து கற்பூரத்தை ஏற்றிக்கொண்டு.

ஹரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப ஸ்வாமியே சரணம் சரணம் - என்று காட்டவும்.

பிறகு மூன்று முறை நமஸ்கரித்து மேற்கண்ட நாமாங்களை சரணம் சொல்லி வணங்கவும். பூஜை முடித்தவுடன் சிறிது பாலை தீபத்திற்கு வைக்கவும். அனுதினமும் இவ்விதம் செய்ய மகர ஜோதியை இறைவனின் கருணையால் நன்கு தரிசித்து சகல சௌபாக்யங்களையும் பெறலாம். ஏழரை ஆண்டு சனிகிரகம் கொடுக்கும் தொல்லைகளிலிருந்தும் விடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

| | |
|---|---|
| சரணம் சரணம் | ஐயப்பா |
| சாமி சரணம் | ” |
| அரிஹர சுதனே | ” |
| அறிவினை வளர்ப்பாய் | ” |
| அன்பர்கள் நேயனே | ” |
| ஆறுமுக சோதர | ” |
| ஆறுதல் தருவாய் | ” |
| ஆனந்த ரூபா | ” |
| ஆக்கமும் செய்வாய் | ” |
| இருமுடிப் பிரியனே | ” |
| இங்கெனக் கருள்வாய் | ” |
| இன்னல்கள் தீர்ப்பாய் | ” |
| இன்பமும் தருவாய் | ” |
| ஈஸ்வரன் புதல்வனே | ” |
| ஈடில்லா ஜோதியே! | ” |
| உத்தமர்க் கருள்வாய் | ” |
| உண்மைத் தெய்வம் | ” |
| ஊக்கமும் அளிப்பாய் | ” |
| ஊழ்வினைத் தீர்ப்பாய் | ” |
| எங்கும் உன் ஜோதியே | ” |
| என்றும் துணை நீ | ” |
| எங்கள் குல தெய்வமே | ” |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குறை தீர்ப்பாய் ஐயப்பா
ஏழைக்கு இறங்கும் ”
ஏழ்மையைப் போக்குவாய் ”
ஐங்கரன் சோதரன் ”
ஐயம் தொலைப்பாய் ”
ஒப்பற்ற வீரனே ”
ஒளிமயமானவனே ”
ஒருதரம் ஐயப்பனென்றாலே ”
ஓடி வந்தருள் வாய் ”
ஓங்கார நாதனே ”
ஓவியத்தில் அருள்வாய் ”
ஒளவியம் கலைப்பாய்
ஒளஷதப் பொருளே ”
கருணைக் கடலே ”
கவலைத் தீர்ப்பாய் ”
சுந்தர ரூபா ”
சுரதன பாலக ”
தர்மம் காப்பாய் ”
தடையை நீக்குவாய் ”
நெய்யபிஷேகம் ”
நேர்த்தியாக செய்தோம் ”
நெருங்கியே வந்து ”
எம்மை நெடுநாள் ”
காப்பாய் ஐயப்பா ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிப்பாடல்

கீழ்க்கண்ட 18 திருப்படிகள் பாடல் பாடி இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு 9 வீதமாக சூடமேற்றி உத்ர மஹா தீபாராதனை செய்யவும். இதை சிறு தட்டில் விபூதியை குவித்து வைத்து நடுவில் சூடத்தை ஏற்றி குருஸ்வாமி காண்பிக்க, மற்றவர்கள் பக்கங்களில் உள்ள சூடத்தை ஏற்ற வேண்டும்.



1. ஒன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இரண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

3. மூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

4. நான்காம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

5. ஐந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

6. ஆறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

7. ஏழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

 Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org 

8. எட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

9. ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

10. பத்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

11. பதினொன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

12. பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

13. பதிமூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பதினான்காம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

15. பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

16. பதினாறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

17. பதினேழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா

18. பதினெட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா-
அதிலொரு தீபம் ஸ்வாமி பொன்னய்யப்பா-
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா
படிதொட்டு வந்தனம் சரணம் பொன்னய்யப்பா
ஸ்வாமி பொன்னய்யப்பா
ஐயனே பொன்னய்யப்பா - ஸ்வாமியே சரணம்
சரணம் பொன்னய்யப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடிப் பிரியன்

இருமுடியை சுமந்து வந்தோம்.... இரக்கமில்லையா - என்
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா..
அளவுமில்லையா...
(இருமுடியை)

எருமேலிப் பேட்டைதுள்ளி பார்க்கவில்லையா.. அந்த
வாவரையே தொழுது வந்தோம் கூறவில்லையா
அழுதலையிலே குளித்து வந்தோம் அறியவில்லையா...
அங்கே ஓர் கல்லெடுத்தோம் தெரியவில்லையா....
(இருமுடியை)

கரிமலையில் ஏறிவந்தோம் காணவில்லையா... எம்மை
கதறவைத்து பார்க்கிறாயே கருணை இல்லையா.. புனித
பம்பையிலே குளித்து வந்தோம் பார்க்கவில்லையா - எம்
பாவங்களை போக்க ஒரு வழியும் சொல்லையா
(இருமுடியை)

நீலிமலையில் ஏறிவந்தோம் நினைவில்லையா - எம்மை
நிற்கவைத்துப் பார்க்கிறாயே கருணையில்லையா
சபரிபீடம் வந்தடைந்தோம் தெரியவில்லையா - உனக்கு
சரங்குத்தி போட்டு வந்தோம் பார்க்கவில்லையா...
(இருமுடியை)

பதினெட்டுப் படிகடந்தோம் பார்க்கவில்லையா... - திரு
பதினெட்டுப் படிகடந்தோம் பார்க்கவில்லையா -
கொடிமரத்தை சுற்றிவந்தோம் காணவில்லையா - அங்கே
கூடி நின்ற பக்தர்களைக் கேட்டுப் பாரய்யா!
(இருமுடியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பையில் பிறந்த பாலன்

பம்பையிலே பிறந்துவிட்ட பாலா
பார்க்க போரேன் கன்னிச்சாமி வாயேன்
ஒருமுறை மலைக்கு போனால்
மறுமுறை வருவேன் தானா தானா
(பம்பையிலே)

வில்லாளி வீரனே வா... வா....
வீர மணிகண்டனே வா... வா...
உத்திரத்தில் உதித்தவனே வா...வா...
உத்தமனே! சத்தியனேவா...வா...வா...வா...
(பம்பையிலே)


அரிகரசுதனே வா... வா...
அன்னதானப் பிரபுவே வா... வா...
ஆறுமுகன் சோதரனே வா... வா...
ஆபத்தில் காப்பவனே வா... வா... வா...
வா...(பம்பையிலே)
உண்மைப்பரம் பொருளே வா... வா...
உலகாளும் காவலனே வா... வா...
ஊமைக்கருள் புரிந்தவனே
ஊழ்வினையை அழிப்பவனே வா...வா...வா...வா...
(பம்பையிலே)

எங்கள்குல தெய்வமே வா... வா...
ஏழை பங்காளனே வா... வா...
ஏகாந்த மூர்த்தியே வா... வா...
எங்களைக் காப்பவனே வா... வா... வா...
(பம்பையிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சாமியே ஐயப்பா



சரணம் சாமி சரணம் என்று
தினமும் பாடுவோம்
மரணபயம் நீங்கிடவே அவனை நாடுவோம்
ஐயனை நாடுவோம்
சங்கடங்கள் தீர்த்திடுவான்
சங்கரபாலன் - மன
சாந்தம் அமைதி தந்திடுவான்
சற்குணசீலன்
வேதனைகள் போக்கிடுவான்
வன்புலி வேந்தன் - அவனை
வேண்டிநின்று நாமும் இங்கே
பாடிடுவோம் (சரணம் சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகவண்ண மோகினியாள்
பாலனானவன் - உலக
மோகங்களை தீர்த்திடுவான்
மோகனரூபன்
மோனநிலை எய்திடவே
பாரினில் நாமும் - அந்த
ஆனந்த ரூபனை
அணுகிடுவோமே (சரணம் சாமி)

வேண்டும் வரம் தந்திடுவான்
வேதநாயகன் - எங்கள்
கண்கண்ட தெய்வமவன்
கலியுகவரதன்
புண்ணியத்தை அடைந்திடவே
எந்த நாளிலும்
கண்ணியமாய் நாமும் அவனை
பணிந்திடுவோமே (சரணம் சாமி)

இருமுடி பிரியன் அவன்
இன்பமானவன்
வருமிடர் அனைத்தும் அங்கே
தடுத்துநிற்பவன்
இன்னல்களை தீர்த்திடும் அந்த
அன்புநாதனை - நெஞ்சம்
இனிக்க இனிக்க பாடிமகிழ்ந்து
ஆடிடுவோமே (சரணம் சாமி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம் (நடைசாத்தும் பாடல்)

ஹரிவராஸனம் விஸ்வமோஹனம்
ஹரித தீஸ்வரம் ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் நித்ய நர்த்தனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 1

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

சரண கீர்தனம் பக்தமானஸம்
பரணலோலுபம் நர்த்தனாலயம்
அருணபாஸுரம் பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 2

ப்ரணய ஸத்யகம் ப்ராணநாயகம்
ப்ரணத கல்பகம் சுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரகவாஹனம் ஸுந்தரானனம்
வரகதாயுதம் வேதவர்ணிதம்
குருக்ருபாகரம் கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 4

த்ரிபுவனார்ச்சிதம் தேவதாத்மகம்
த்ரிநயனம் ப்ரபும் திவ்ய தேசிகம்
த்ரிதச பூஜிதம் சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 5

பவபயாபஹம் பாவுகாவஹம்
புவன மோஹனம் பூதிபூஷணம்
தவள வாஹனம் திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 6

களம்ருது ஸ்மிதம் சுந்தரானனம்
களபகோமளம் காத்ரமோஹனம்
களபகேஸரீ வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 7

ச்ரிதஜனப்ரியம் சிந்திதப்ரதம்
ஸ்ருதிவிபூஷணம் ஸாதுஜீவனம்
ஸ்ருதிமனோகரம் கீதலாலயம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண) 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைமயில் வாகனனே



பச்சைமயில் வாகனனே - சிவ
பாலசுப்ரமண்யனே வா - இச்சையெல்லாம்
உந்தன் மேலே வைத்தோம்
எள்ளளவும் பயமில்லையே (பச்சை)

கொச்சை மொழியானாலும் - உன்னை
கொஞ்சி கொஞ்சி பாடிடுவோம்
சேவல் கொடி கொண்டவனே - வா வா
சிங்கார வேல் முருகா (பச்சை)

நெஞ்சமதில் கோவில் அமைத்தோம் - அதில்
நேர்மையாய் தீபம் வைத்தோம்
நெஞ்சிலம்பு கொஞ்சிடவே - முருகா
சிங்கார வேல் முருகா (பச்சை)

அலைகடல் ஓரத்திலே - எங்கள்
அன்பார்ந்த ஆறுமுகா - முருகா
அலையா மனம் தந்தாய் - உனக்கு
அனந்த கோடி நமஸ்காரம் (பச்சை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாவர் முகம்மது ஊரல்லோ

லாகிலாகி இல்லல்லோ
வாவர் முகம்மது ஊரல்லோ
எரிமேலி நாங்கள் வந்தல்லோ
கரும்புள்ளி செம்புள்ளி இட்டல்லோ (லாகிலாகி)

மணிகண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி வாவரரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவரே (லாகிலாகி)

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையில் தந்தவரே
எரிமேலியில் குடிகொண்டவரே (லாகிலாகி)

வீரமும் தீரமும் கொண்டவரே
எரிமேலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீர்
கன்னிமார்களை காத்திடுவீர் (லாகிலாகி)

உன்னிடம் நாங்கள் வந்திடுவோம்
பேட்டையாடி துள்ளிடுவோம்
வாவருசாமி திந்தகத்தோம்
ஐயப்பசாமி திந்தகத்தோம் (லாகிலாகி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிச்சாமி

துளசிமணி மாலைகட்டி, இருமுடியும் தலையில் ஏந்தி
சபரி நோக்கி நடையைப்போடு கன்னிச்சாமி - அங்கே
சாஸ்தாவின் அருள் கிடைக்கும் கன்னிச்சாமி
(துளசி)

எரிமேலி பேட்டையிலே கரிமலையில் நடக்கையிலே
எத்தனையோ இன்பம்உண்டு கன்னிச்சாமி - நீயும்
வந்துபார்த்து வரத்தைகேளு கன்னிச்சாமி (துளசி)

பாட்டுப்பாடி பஜனைபாடி பம்பாநதி தீர்த்தமாடி
காட்டுக்குள்ளே குடியிருப்போம் கன்னிச்சாமி - அதிர்
வேட்டுவச்சி வழி நடப்போம் கன்னிச்சாமி (துளசி)

மலையதிரச் சரணம்போட்டு மனமுருகப் பாட்டும்கேட்டு
அலையலையாய் நடந்துவந்தோம் கன்னிச்சாமி - அங்கே
ஆனந்தஜோதி பார்ப்போம் கன்னிச்சாமி (துளசி)

---


## சாமியே சரணம் ஐயப்பா

பூதநாத சதானந்தா
ஸர்வ பூத தயா பரா
ரக்ஷ -ரக்ஷ மா பாஹோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை தேங்காய் பாடல்



ஒவ்வொரு நபராக ஸ்வாமியின் முன் அமர்ந்து குருஸ்வாமியின் உதவியுடன் ஒவ்வொரு முத்திரையிலும்

**ஸ்வாமியே சரணம் ஐயப்பா**
**நெய்யபிஷேக ப்ரியனே சரணம் ஐயப்பா**
**பால் அபிஷேக ப்ரியனே சரணம் ஐயப்பா**

| | |
|---|---|
| ஸ்வாமியே ஐயப்பா | இருமுடிக்கட்டு சபரிமலைக்கு |
| ஐயப்பா ஸ்வாமியே | சபரிமலைக்கு இருமுடிக்கட்டு |
| ஸ்வாமி சரணம் | யாருடகட்டு ஸ்வாமியுடகட்டு |
| ஐயப்ப சரணம் | யாரைக்காண ஸ்வாமியைக் காண |
| ஐயப்ப சரணம் | நெய்யபிஷேகம் ஸ்வாமிக்கே |
| ஸ்வாமி சரணம் | பாலபிஷேகம் ஸ்வாமிக்கே |
| தேவன் சரணம் | கற்பூரதீபம் ஸ்வாமிக்கே |
| தேவி சரணம் | காணிப்பொன்னும் ஸ்வாமிக்கே |

ஸ்வாமியே ஐயப்பா - என்று குரல் கொடுத்து முத்திரையில் நெய்யினை நிறைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையினில் ஜொலிப்பாய்!
# தாய்போல் காப்பாய்!

*கவிஞர் அரிமழம் ப. செல்லப்பா*



எரிமேலி வாசா!
  எங்களின் நேசா! 1
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

கரிமலை வாசா!
  கண்கண்ட நாதா! 2
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யினில் குளிப்பாய்!
நித்தமும் மகிழ்வாய்! 3
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

தையினில் ஜொலிப்பாய்!
தாய்போல் காப்பாய்! 4
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

பக்தரைக் காப்பாய்!
பாவத்தைக் களைவாய்! 5
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

சிக்கலைத் தீர்ப்பாய்!
சிறப்புற அருள்வாய்! 6
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

மலையினில் இருப்பாய்!
மனதினில் நிறைந்தாய்! 7
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையென அமர்ந்தாய்!
  செயல்பட வைப்பாய்! 8
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

கார்த்திகை முழுதும்!
  கருணையைப் பொழிவாய்! 9
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

பார்த்தனின் மகனாய்ப்!
  பாரதம் காப்பாய்! 10
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

பந்தளச் செல்வா!
  பம்பையின் மைந்தா! 11
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

வந்தே தொழுதோம்!
  வரங்கள் பெற்றோம்! 12
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை பொறுத்தல்

செய்தபிழை பொறுத்துச்
சிறியோரை ஆட்கொண்டு
சிந்தையில் வருவாயே
சபரியில் ஐயனே

வைதாலும் அவர்வாழ
அருள்செய்யும் மணிகண்டா
வாயார வாழத்திஉனை
வணங்குவார் வாழ்வுயரத்

தலைபாரம் எடுத்து உந்தன்
சன்னதி வந்தோரைத்
தாயெனக் காப்பாயே
அவர்பாரம் ஏற்பாயே

அலையாது எங்கள்மனம்
அனுதினம் உனைப்பாட
அருள்செய்ய வருவாயே
அடிமலர் தருவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலையை அவிழ்த்து விரதத்தினை முடித்துக் கொள்ளும் பூஜை

குருஸ்வாமி, மாலையணிந்த நபரின் கழுத்திலிருந்து பின்வரும் ஸ்லோகத்தைச் சொல்லி மாலையைக் கழற்றி, சந்தனத்தில் நனைத்து ஐயனை மலையேற்றிவிட வேண்டும்.

*ஞானமுத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்*
*வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர முத்ராம் நமாம்யஹம்*
*சாந்த முத்ராம் சத்ய முத்ராம் வ்ருத முத்ராம் நமாம்யஹம்*
*சபர் யாச்ரம சத்யேன முத்ராம் பாது சதாபிமே*
*குரு தக்ஷிணயா பூர்வம் தஸ்யா நுக்ரஹ காரிணே*
*சரணாகத முத்ராக்யம் த்வன் முத்ராம் தாரயாம் யஹம்*
*சின் முத்ராம் கேசரி முத்ராம் பத்ர முத்ராம் நமாம்யஹம்*
*சபர் யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோ நம*

வீட்டிலுள்ள தாய் தந்தையர், மற்றுமுள்ளோர்க்கும் ஐயனின் ப்ரஸாதத்தை வழங்கி, ஸ்வாமியின் திருவுருவை வணங்கி, திருவிளக்கில் உள்ள தீபம் தானே அடங்கும் வரை எரிய விட வேண்டும்.

அன்பர்களும், நண்பர்களும் இப்பூஜை முறையினை கடைப்பிடித்து, எம்பெருமான் ஸ்ரீ ஐயப்பனின் அருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் குறித்து

**திருநாமம் :** ஐயப்பன் (பூதநாதன், மணிகண்டன், ஆர்யநாதா, தர்மசாஸ்தா, ஹரிஹரபுத்ரன், ஐயனாரப்பன் எனப் பல பெயர்கள் உண்டு.

**பிறந்த நாள் :** மார்கழி மாதம், சனிக்கிழமை, பஞ்சாமி திதி, உத்திர நட்சத்திரம், விருச்சிக லக்னம் கூடிய சுபதினம்.

**பெற்றோர் :** மோகினியான ஹரியும், சிவனும்
வளர்த்தோர் : பந்தள மன்னரான ராஜசேகரனும் அவர் மனைவியும்

**மனைவியர் :** பூரணை, புஷ்கலை (மகிஷியை அழிக்கப் பிறந்தபோது இவர் பிரம்மச்சாரி)
மகன் : ஸத்யகன்

**சகோதரர்கள் :** கணபதி, கந்தன், ராஜராஜன், (பந்தள மன்னரின் மகன்)

**நண்பர் :** வாபரர், (மதம், நட்புக்குத் தடையல்ல என உணர்த்தியவர்)

**வாகனம் :** புலி. (தர்ம சாஸ்தாவாக அவதரித்த போது இவரது வாகனம் வெள்ளை யானை)

**பிடித்தது :** நெய்த்தேங்காய், இருமுடி

**பிடித்த மாலை :** துளசி மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருப்பிடம்** : சபரிமலை, சரணம் என்று வரும் பக்தர்களின் நெஞ்சம்

**கலியுக தரிசனம்** : மகர ஜோதியாய் காந்த மலை மீது. (மகர மாதம் எனப்படும் தை மாதத்தின் முதல் நாளில் தோன்றுவதால், மகர ஜோதி)

**தத்துவம்** : பஞ்ச இந்திரியங்கள், அஷ்டசித்திகள், முக்குணங்கள், இரு வித்தைகள் எனும் பதினெட்டுப் படிகளைக் கடந்து வந்தால் இறைவனைத் தரிசிக்கலாம்.


**அவதார நோக்கம்** : சரணம் என்று வரும் பக்தர்கள் அறிந்தும் அறியாமலும் செய்யும் குற்றங்களை மன்னித்து அவர்களைக் காத்துரட்சிப்பது.

## மன்னித்துக் காத்தருள்வாய் மணிகண்டா!

தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்தருள வேண்டும். பதினெட்டாம் படிமேல் வாழும் காசி, இராமேஸ்வரர், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் வில்லாளி வீரன், வீரமணி கண்டன், ஹரிஹர சுதன், ஆனந்த சித்தன், ஐயன் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பம்பை நாதனை அடையப் பதினொரு வழிகள்

1. கோட்டயத்திலிருந்து பம்பைக்கு
வழி : புதுப்பள்ளி, கருக்கச்சால், மணிமாலை, இராணி, வடசேரிக்கரை, சாலக்காயம், பம்பை
(போக்குவரத்திற்கு ஏற்ற சாலை - 122 கி.மீ)

2. கோட்டயத்திலிருந்து எருமேலிக்கு
வழி : புதுப்பள்ளி, கருக்கச்சால், மணிமாலை, எருமேலி
(போக்குவரத்திற்கு ஏற்ற சாலை - 52 கி.மீ)

3. எருமேலியிலிருந்து பம்பைக்கு
வழி : இராணி, வசேரிக்கரை, சாலக்காயம்
(போக்குவரத்திற்கு ஏற்ற சாலை - 86 கி.மீ)

4. எருமேலியிருந்து பம்பைக்கு
வழி : காளைக்கட்டி, அழுதாமலை, இஞ்சிப்பாறைக்கோட்டை, புதுஸேரி, கரிமலை
(பெருவழிப்பாதை - 56 கி.மீ.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புனலூரிலிருந்து பம்பைக்கு
வழி : கொண்ணி, கும்புழா, வடசேரிக்கரை, சாலக்காயம், பம்பை
(போக்குவரத்திற்கு ஏற்ற சாலை - 120 கி.மீ)

6. வண்டிப்பெரியாரிலிருந்து மவுண்ட் எஸ்டேட்டிற்கு
(காரில் செல்லக்கூடிய சாலை - 8 கி.மீ.)

7. மவுண்ட எஸ்டேட்டிலிருந்து சபரி மலைக்கு நடந்து செல்லும் மலைப்பாதை - 9 கி.மீ.
(வழி மிகவும் செங்குத்தானது)

8. வண்டிப்பெரியாரிலிருந்து கோழிக்காணத்திற்கு
(போக்குவரத்திற்கு ஏற்ற சாலை - 15 கி.மீ.)

9. கோழிக்காணத்திலிருந்து உப்புத்தாராவிற்கு
(ஜீப் செல்லக்கூடிய சாலை - 10 கி.மீ.)


10. உப்புத்தாராவிலிருந்து சபரி மலைக்கு
(நடை வழிப்பாதை - 3.5 கி.மீ.)

11. (பம்பையிலிருந்து சபரி மலைக்கு)
அப்பாச்சிமேடு, சபரி பீடம், சரங்குத்தி, சன்னிதானம் (சிறுவழிப்பாதை - 6 கி.மீ.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரி மலை யாத்திரைக்கு இருமுடி எடுத்துச் செல்பவர்கள் நோக்க வேண்டிய குறிப்புகள்



1. இருமுடிப்பையின் அளவு
அகலம் 1 1/4 அடி, நீளம் 2 1/2 அடி, மையத்தில் 1 அடி அகலத்தில் வாய் இருக்க வேண்டும். இருபக்க ஓரங்களிலும் கயிறு இருக்க வேண்டும்.

2. சிறுபைகளின் அளவு
1 அடி அகலமும் 1 1/4 அடி நீளமும் கொண்ட தாய் ஐந்து பைகள் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இருமுடியில் இருக்க வேண்டிய பொருள்கள்
1. மஞ்சள் பொடி, 2. குங்குமம், 3. விபூதி, 4. பன்னீர் பாட்டில் 5. வெற்றிலை பாக்கு, 6. கற்பூரம், 7. ஊதுவத்தி, 8. பச்சரிசி, 9. வெல்லம், 10. பாசிப்பருப்பு, 11. சந்தனம், 12. அவல், 13. நெல் பொரி, 14. முந்திரி, 15. உலர்ந்த திராட்சை, 16. தேன், 17. மெழுகுவர்த்தி, 18. ஜாக்கெட் துணி, 19. காணிக்கை, (அவர் அவர் விருப்பம் போல்)


4. முன் முடியில் இருக்க வேண்டியவை
நெய் நிறைந்த முத்திரைத் தேங்காயுடன் ஐயப்பனுக்குச் செலுத்த வேண்டிய அபிஷேகப் பொருள்கள் அடங்கிய பாக்கெட்டும் வைத்துக் கட்டப்பட வேண்டும்.

5. பின்முடியில் இருக்க வேண்டியவை
படித்தேங்காய் இரண்டும், முன்முடிக்குத் தக்கவாறு வேஷ்டி துண்டுகளை வைத்தும், பின்முடியைக் கட்ட வேண்டும். 18 படி ஏறுவதற்கு முன்பு பின் முடியைப் பிரித்துத் தேங்காய்களை எடுத்துச் சிதறு காயாக உடைக்க வேண்டும். சன்னிதானம் சென்றவுடன் முன்முடியைப் பிரித்து அபிஷேகம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை செல்வோர் மேற்கொள்ள வேண்டிய விரத முறைகள்



தன்னைத் தேடி வரும் பக்தர்களுக்கு அருள் புரியும் வள்ளலாக விளங்கும் சபரி மலை வாசன், கேரளாவின் மலைப் பகுதியில் கோவில் கொண்டுள்ளான். எரிமேலி என்னும் இடத்தில் இருந்து ஏறத்தாழ நாற்பத்திரண்டு மைல் தொலைவில் மலை, ஆறுகள் இவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே உள்ளது சபரிமலை. நாற்புறமும் மலைகளால் சூழப்பட்டு நடுவில் சுவாமியின் சன்னிதானம் அமைந்துள்ளது. சபரிமலை குளிரான மலைப் பிரதேசம். அதிலும் பயண நேரமோ மிகவும் பனியும் குளிருமான மார்கழி மாதம். பாதையோ மிகவும் கரடுமுரடானது. வழியெங்கும் கொடுந்தன்மையுள்ள மிருகங்கள் வாழும் இடம். எனவே, சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் கட்டுப்பாட்டுடன் விரதங்களையும் விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.


1. சபரிமலை செல்ல விரும்புவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாளோ அல்லது 19ஆம் தேதிக்குள்ளோ ஒரு நாளில் மாலை அணிய வேண்டும். கார்த்திகை மாதம் முதல் நாள், மாலை அணிந்தால் நாள் பார்க்க வேண்டாம். அதற்குப்பின் அணிபவர்கள் நல்ல நாள் பார்த்து மாலை அணிய வேண்டும்.

2. மாலை, துளசி மணி 108 கொண்டதாகவோ, உருத்திராட்சமணி 54 உள்ளதாகவோ வாங்கி, அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த பதக்கம் ஒன்றையும் இணைத்து அணிய வேண்டும்.

3. தாய் தந்தையின் நல்லாசியுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் பூஜை செய்து மாலை அணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4. இவ்வாறு மாலை அணிந்த பின்பு புலால் உண்ணுதல், மது அருந்துதல் கூடாது. கோப தாபம், குரோதம், விரோதம் கொள்ளக்கூடாது.

5. பெண்களை விரும்புதல், பேசுதல், நினைத்தல் ஆகியவை கண்டிப்பாகக் கூடாது.

6. மாலையணிந்தவர்கள் நீலம், கருப்பு, காவி, மஞ்சள், பச்சை ஏதாவது ஒரு வண்ணத்தில் வஸ்திரம் தரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தீட்சை வளர்த்து, பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

8. மற்றவர்களிடம் பேசும் பொழுது சாமி சரணம் எனத் தொடங்கி, விடைபெறும் பொழுது சாமி சரணம் எனக் கூறவேண்டும்.

9. காலையிலும், மாலையிலும் குளிர்ந்த நீரில் குளித்துக் கோவில்களிலோ, வீடுகளிலோ ஐயப்பன் சரணங்கள் கூறி வணங்க வேண்டும். புதன், சனிக்கிழமைகளில் விசேஷ பூஜைகள் செய்யலாம்.

10. எதிர்ப்படும் ஐயப்ப பக்தர்களை ஐயப்பனாகவும், பெண்களை மாளிகைப் புறத்தம்பிகையாகவும் கருதிப் பழக வேண்டும்.

11. கன்னிச் சாமிகள் தங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் பூஜைகள் நடத்தி ஐயப்பன்மார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்விக்கலாம்.


12. படுக்கை விரிப்பு, தலையணை நீக்கி, சிறு துண்டை மட்டும் தரையில் விரித்துப் படுக்க வேண்டும்.

13. காலணிகள், குடை முதலிய பொருள்களைப் பயன் படுத்தக்கூடாது.

14. துக்க காரியம் எதிலும் கலந்துகொள்ளக்கூடாது. அப்படிச் செல்ல வேண்டும் என்ற நிலை இருந்தால், தான் அணிந்துள்ள மாலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகுதான் கலந்து கொள்ள வேண்டும். மாலையைக் கழற்ற நேர்ந்து விட்டால் மறு வருடம் மாலையணிந்து செல்ல வேண்டும்.


15. இருமுடிக்கட்டு பூஜையை வீட்டிலோ, குருசாமி இடத்திலோ, கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

16. சபரிமலைப் பயணம் புறப்படுகையில் யாரிடமும் போய் வருகிறேன் எனக் கூறக்கூடாது.

17. பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த தமது முன்னோர்களை நினைத்து அவர்களுக்கும் ஈமக்கடன்களைச் செய்து நீராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும், ஐயப்பனின் அருள் பிரசாதக் கட்டினைத் தலையில் ஏந்திய படியே வீட்டு வாயில்படியில் விடலைத் தேங்காய் அடித்து வீட்டினுள் நுழைய வேண்டும்.

19. வீட்டில் பூஜை அறையில் பூஜை செய்து, கட்டினைப் பிரித்து, பிரசாதங்களை விநியோகம் செய்ய வேண்டும்.

20. யாத்திரை இனிய முறையில் நிறைவுற்றபின் குருநாதர் மூலம் மாலையைக் கழற்றி, ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு மாலையை அணிவித்து விட்டு விரதம் முடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் மங்களமே சுவாமிக்கு
மங்களம் மங்களமே ஜெய ஜெய மங்களம்
சுப சுப மங்களம் ஜெய ஜெய மங்களமே
கணபதி சோதரா கந்தனின் தம்பியே
ஜெய ஜெய மங்களமே சுவாமிக்கு
சுப சுப மங்களமே (ஜெய ஜெய)

பார்வதி பாலா பரம தயாளா
ஜெய ஜெய மங்களமே சுவாமிக்கு
சுப சுப மங்களமே (ஜெய ஜெய)

ஹரிஹரன் புதல்வா, ஆனந்த ரூபா
ஜெய ஜெய மங்களமே சுவாமிக்கு
சுப சுப மங்களமே (ஜெய ஜெய)

வில்லாளி வீரன் வீரமணிகண்டா
ஜெய ஜெய மங்களமே சுவாமிக்கு
சுப சுப மங்களமே (ஜெய ஜெய)

அனுதினம் தொழுவோம் அருளினை தருவாய்
ஜெய ஜெய மங்களமே சுவாமிக்கு
சுப சுப மங்களமே (ஜெய ஜெய)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் விளக்கேற்றுங்கள்

ஒரு ஐயப்ப பக்தர் மாலை அணிந்ததிலிருந்து அவர் கோயிலுக்கு சென்று திரும்பும் வரை வீட்டுவாசலில் தினமும் விளக்கேற்ற வேண்டும். அந்த விளக்கு குறைந்தபட்சம் இரண்டு மணி நேரமாவது எரிய வேண்டும். பக்தர் கோயிலுக்குச் சென்றபிறகும் வீட்டில் உள்ளவர்கள் அந்த விளக்கை தினமும் ஏற்ற வேண்டும். கோயிலுக்குச் சென்ற பக்தருக்கு அந்த ஜோதி வழி காட்டுவதாக ஐதீகம். பக்தர் திரும்பி வந்தவுடன் ஜோதி ஏற்றிய இடத்தின் அருகில் தேங்காய் உடைத்து 'சுவாமியே சரணம் ஐயப்பா' என முழங்க வேண்டும். அதன் பிறகே வீட்டிற்குள் செல்ல வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Printed by:*
**Lanka Publishing House**
Colombo-11, Tel: 0602137006, 4933021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org